## ஜனவரி - 8

**"ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள். உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும், நன்மை செய்ய நாடுங்கள்."**

**- 1 தெச 5:15**

வேதாகமத்தின் திட்ட அளவிற்கு இணங்க தேவனுடைய உண்மையுள்ள ஜனங்கள் உலகிலுள்ள மற்றெல்லா ஜனங்களைவிட மிக அதிகமாக ஒழுக்கம் நிரம்பியவர்களாயும், மிக அதிகமாக நாகரீகமானவர்களாயும், மிக அதிகமாக மரியாதையுள்ளவர்களாயும், மிக அதிகமாக தாராள மனமுடையவர்களாகவும், மிக அதிகமாக பட்சமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். இவைகள் எல்லாம் அவர்களில் குறைவற்ற விதமாக இருக்க வேண்டும். உலகில் சாதாரணமாகக் காணப்படுவதுபோல, பட்சம், சாந்தம் இவைகளின் வெறும் வெளிப்படையான உருவத்தையும் தோற்றத்தையும் கொண்டவர்களாயிராமல், ஆனால், இருதயத்திலிருந்து புறப்படுகிறதும், கர்த்தருடைய ஆவியை, சத்தியத்தின் ஆவியை, அன்பின் ஆவியை, நீதியின் ஆவியை உயர்வாக மதிக்கிறதிலிருந்து புறப்படுகிறதுமான பட்சத்தையும், சாந்தத்தையும் உடையவர்களாயிருக்க வேண்டும். **- Z ’01, 297 (R 2877).**

பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்கிற ஆவி சாத்தானின் ஆவி. சாந்த குணத்தின் ஆவியும், பழிக்குப்பழி வாங்காதிருக்கும் குணத்தின் ஆவியும் கர்த்தரின் ஆவியாகும். ஆகையால், கர்த்தருடைய ஆவியையுடைய எல்லோரும் நண்பனாகவோ அல்லது பகைவனாகவோ இருந்தாலும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு எல்லா மனுஷருக்கும், முக்கியமாக விசுவாச வீட்டாருக்கும் நன்மை செய்ய இடைவிடாமல் விழிப்புள்ளவர்களாயிருக்க வேண்டும். எப்பொழுதும் இந்தப் போக்கைப் பின்பற்றினால், நம்முடைய இருதயம் அதிகதிகமாக நம்முடைய கர்த்தரின் சாயலின் அருகிற்சேரும்.

**-P’35, 182.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**லேவி 19:18; உபா 32:25; சங் 94:1; நீதி 20:22; மத் 5:38-41; ரோம 12:12-17,19-21 எபி 10:30; 1பேது 2:23; 3:9; கலா 6:10; 1தெச 3:12; 1தீமோ 6:18.**

**கோபுர வாசிப்பு : Z ’16, 149 (R 5897).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் தீமைக்குத் தீமை செய்தேனா? தீமைக்கு நன்மை செய்தேனா? அல்லது நன்மைக்குத் தீமை செய்தேனா? எந்தச் சந்தர்ப்பங்களில்? என்ன நோக்கத்துடன்? என்ன பலனுடன்?**